1. குளோபல் வரையறு நிறுமம் ஒன்று ரூ.100 மதிப்புள்ள 20000 பங்குகளை பங்கொன்றுக்கு ரூ .110 வீதம் வெளியீடு செய்தது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.
   விண்ணப்பத்தின் போது ரூ.20 ஒதுக்கீட்டின் போது ரூ.40 (முனைமம் உட்பட)
   முதலழைப்பின் போது ரூ.30
   இரண்டாவது மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.20 அனைத்துப் பங்குகளும் முழுமையாக ஒப்பப்பட்டன. இரு அழைப்புகளும் விடுக்கப்பட்டு தொகைகள் அனைத்தும் முழுமையாகப் பெறப்பட்டன.குறிப்பேட்டுப்பதிவுகள் தருக

2. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூ 10 மதிப்புள்ள 4000 பங்குகள் மீது முதல் அழைப்பு தொகைபங்கொன்றுக்கு ரூ. 3 வீதமும் இறுதி அழைப்புத் தொகை பங்கொன்றுக்கு ரூ. 2 வீதமும் பெறப்படாத காரணத்தினால் அப்பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர், இதில் 1000 பங்குகள் மட்டும் பங்கொன்றுக்கு ரூ .7 வீதம் மற்றும் செலுத்தப்பட்டவைகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன.தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. மேலும் ஒறுப்பிழப்பு கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்கு தயார் செய்க.

3. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூ 100 மதிப்புள்ள 5000 பங்குகள் மீது முதல் அழைப்பு தொகைபங்கொன்றுக்கு ரூ. 20 வீதமும் பெறப்படாமைக்காக ஒறுப்பிழப்பு செய்தனர். இப்பங்குக்கள் பங்கொன்றுக்கு ரூ.70 வீதம் முற்றும் செலுத்தப்பட்டவையாக மறு வெளியீடு செய்யப்பட்டன.தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. மேலும் ஒறுப்பிழப்பு கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்கு தயார் செய்க

4. ஒரு நிறுமம் ஒன்று ரூ.10 மதிப்புடைய 5000 பங்குகள் மீது இறுதி அழைப்புத் தொகை பங்கொன்றுக்கு ரூ. 3 வீதம் செலுத்தப்படாத்தால் ஒறுப்பிழப்பு செய்தது. இப்பங்குகள் ரூ.30000–க்கு முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.
5. ஆல்பா வரையறு நிறுமம் ஒன்று ரூ.100 மதிப்புள்ள 10000 பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.
   விண்ணப்பத்தின் போது ரூ.30
   ஒதுக்கீட்டின் போது ரூ.40 (தள்ளுபடியில்)
   முதலாவது மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.20
   பொதுமக்களிடமிருந்து 8000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு அனைத்து பங்குகளும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பெற வேண்டிய அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன.குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. மேலும் வங்கிக் கணக்கு பங்கு முதல் கணக்கு பத்திர முனைமக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.
6. சக்ஸஸ் நிறுமம் ஒவ்வொன்றும் ரூ.10 முமமதிப்புள்ள 100000 சாதாரணப் பங்குகளை பங்கு ஒன்றுக்கு 20% முனைமத்தில் முழுவதும் செலுத்தப்பட்டவையாக வெளியிட்டது. குறிப்பேட்டு பதிவு தருக.
7. ராஜன் நிறுமம் ஒவ்வொன்றும் ரூ.100 முமமதிப்புள்ள 5000 சாதாரணப் பங்குகளை பங்கு ஒன்றுக்கு ₹ 10 வட்டத்தில் முழுவதும் செலுத்தப்பட்டவையாக வெளியிட்டது. குறிப்பேட்டு பதிவு தருக.

8. நவீனா வரையறு நிறுமம் ஒன்று ரூ.10 முகமதிப்புள்ள 50000 பங்குகளைரூ2 முனைமத்திலு கீழ்க்கண்டவாறு செலுத்தத்தக்க வண்ணம் வெளியிட்டது.

விண்ணப்பத்தின் போது ரூ.2
ஒதுக்கீட்டின் போது ரூ.5 (முனைமம் சேர்த்து)
முதலாவது அழைப்பின் போது ரூ.3
இறுதி அழைப்பின் போது ரூ.2

அந்நிறுமம் 70000 பங்குகளுக்கு விண்ணக்கங்கள் பெற்றது. 50000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் முழுவதுமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. மீ பெற வேண்டிய அனைத்துத் தொகைகளும் பெறப்பட்டன.குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

9. நித்யா, ராணி, புஷ்பா என்ற கூட்டாளிகள் முறையே 2 : 2 : 1 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர் பின்வரும் நிறுவன சொத்துகள், பொறுப்புகள் மறுமதிப்பீட்டுக்குட்பட்டு புஷ்பா என்பவர் விலக முடிவெடுத்தார்

அ. கட்டிடத்தின் மதிப்பு ரூ 45,000 மதிப்பேற்றம் செய்வது
ஆ. பதிவு பெறா முதலீடுகள் ரூ 20,000 கணக்கில் கொண்டுவருவது
இ. சரக்கிருப்பு மீது ரூ 10,000., அறைகலன் மீது ரூ 8,000 தேய்மானம் நீக்குவது
ஈ. பற்பல கடனாளிகள் மீது ரூ 7,000 போக்கெழுதுவது

தேவையான பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டு கணக்கினை தயார் செய்க

10. நவீன்,நிதின் என்ற கூட்டாளிகள் 7:5 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர் அவர்களின் 2004 டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின் வருமாறு.

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 40,000 | வங்கி | 52,000 |
| பொதுக்காப்பு | 1,00,000 | பற்பல கடனாளிகள் | 40,000 |
| தொழிலாளி ஈட்டுத்தொகை நிதி | 60,000 | சரக்கிருப்பு | 72,000 |
| முதல் கணக்குகள்: | | இயந்திரம் | 1,60,000 |
| நவீன் 1,20,000 | | இலாபநட்டகணக்கு | 48,000 |
| நிதின் 80,000 | 2,00,000 | நற்பெயர் | 28000 |
| | 4,00,000 | | 4,00,000 |

2005 ஜனவரி 1 ஆம் நாள் நிதின் கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு நவீன் என்பவர் நிறுவனத்தை எடுத்துக் கொண்டார்.

(அ) நிறுவனத்தின் நற்பெயர் ரூ.36,000 என மதிப்பீடு செடீநுயப்பட்டது.
(ஆ) இயந்திரம் மீது தேடீநுமானம் 10% நீக்கப்பட்டது.
(இ) பற்பல கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்கப்பட்டது.
(ஈ) தொழிலாளர் ஈட்டுத்தொகை நிதிப் பொறுப்பு ரூ.36,000 என மதிப்பிடப்பட்டது.

மறுமதிப்பீட்டுக் க/கு, முதல் கணக்குகள் மற்றும் நவீனின் இருப்புநிலைக்குறிப்பு ஆகியவற்றைத் தயார் செய்க